# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஆறாம் பத்து

## இரண்டாம் திருமொழி - பொறுத்தேன்
## திருவிண்ணகர் 2

** பொறுத்தேன் புன் சொல் நெஞ்சில் * பொருள் இன்பம் என இரண்டும்
இறுத்தேன் * ஐம்புலன்கள் கடனாயின * வாயிலொட்டி
அறுத்தேன் ** ஆர்வச் செற்றம் அவை தன்னை * மனத்து அகற்றி
வெறுத்தேன் * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 1

மறந்தேன் உன்னை முன்னம் * மறந்த மதியின் மனத்தால் *
இறந்தேன் எத்தனையும் * அதனால் இடும்பைக் குழியில் **
பிறந்தே எய்த்து ஒழிந்தேன் * பெருமான்! திருமார்பா! *
சிறந்தேன் நின் அடிக்கே * திருவிண்ணகர் மேயவனே! 2

மானேய் நோக்கியர் தம் * வயிற்றுக் குழியில் உழைக்கும் *
ஊனேர் ஆக்கை தன்னை * உதவாமை உணர்ந்து உணர்ந்து **
வானே! மாநிலமே! * வந்து உவந்து என் மனத்து இருந்த
தேனே! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 3

பிறிந்தேன் பெற்ற மக்கள் * பெண்டிர் என்றிவர் பின் உதவாது
அறிந்தேன் * நீ பணித்த அருள் என்னும் * ஒள் வாள் உருவி
எறிந்தேன் ** ஐம்புலன்கள் இடர் தீர * எறிந்து வந்து
செறிந்தேன் * நின் அடிக்கே * திருவிண்ணகர் மேயவனே! 4

பாண் தேன் வண்டறையும் குழலார்கள் * பல்லாண்டு இசைப்ப *
ஆண்டார் வையம் எல்லாம் * அரசாகி ** முன் ஆண்டவரே
மாண்டார் என்று வந்தார் அந்தோ! * மனை வாழ்க்கை தன்னை
வேண்டேன் * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 5

கல்லா ஐம்புலன்கள் அவை * கண்டவாறு செய்ய கில்லேன் *
மல்லா! மல் அமருள் மல்லர் மாள * மல் அடர்த்த
மல்லா! ** மல்லல் அம்சீர் * மதிள் நீர் இலங்கை அழித்த
வில்லா! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 6

வேறா யான் இரந்தேன் * வெகுளாது மனக்கொள் எந்தாய்! *
ஆறா வெந்நரகத்து * அடியேனை இடக் கருதி **
கூறா ஐவர் வந்து குமைக்கக் * குடி விட்டவரை *
தேறாது உன் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 7

தீ வாய் வல்வினையார் * உடன் நின்று சிறந்தவர் போல் *
மேவா வெந்நரகத்து * இட உற்று விரைந்து வந்தார் **
மூவா வானவர் தம் முதல்வா! * மதி கோள் விடுத்த
தேவா! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 8

போதார் தாமரையாள் * புலவிக் குல வானவர் தம்
கோதா! * கோதில் செங்கோல் * குடை மன்னர் இடை நடந்த
தூதா! * தூமொழியாய்! சுடர் போல் * என் மனத்து இருந்த
வேதா! * நின் அடைந்தேன் * திருவிண்ணகர் மேயவனே! 9

** தேன் ஆர் பூம் புறவில் * திருவிண்ணகர் மேயவனை *
வான் ஆரும் மதிள் சூழ் * வயல் மங்கையர் கோன் ** மருவார்
ஊன் ஆர் வேல் கலியன் * ஒலி செய் தமிழ் மாலை வல்லார் *
கோனாய் வானவர் தம் * கொடி மாநகர் கூடுவரே 10

**அடிவரவு:** பொறுத்தேன் மறந்தேன் மானேய் பிறிந்தேன் பாண் கல்லா வேறா தீவாய் போதார் தேனார் துறப்பேன்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---